Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road,
Madurai-625 001.



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 231 | உள்ளூர் - 19.08.2026 | புதன்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 55 | * Issue 231 | வெளியூர் - 20.08.2026 | வியாழக்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |



**அனைத்து பிரச்சனைகளும் தீர சக்தி வாய்ந்த பரிகாரங்கள்!** | **புதன் தோறும் குவியும் வேலைவாய்ப்புகள்!** | **வெளிநாட்டு பணம்: அதிரடி சோதனை!** | **தமிழகம் முழுவதும் லஞ்ச ஒழிப்பு வேட்டை!**

## பிரதமரின் நிவாரண நிதியின் இருப்புத்தொகை ரூ.8,452 கோடியாக உயர்வு!




புதுடெல்லி, ஆக. 19–

கொரோனா காலத்தின்போது பொது சுகாதார அவசரநிலை அல்லது இயற்கையான வேறு எந்த வகையான அவசரநிலை, பேரழிவு போன்றவற்றுக்கு நிவாரணம் அல்லது உதவியை மேற்கொள்வதற்காக பிரதமரின் குடிமக்கள் உதவி மற்றும் அவசரகால நிவாரண நிதி (பிஎம் கேர்ஸ் பண்ட்)' என்ற பெயரில் ஒரு பொது அறக்கட்டளை அமைக்கப்பட்டது. இது, 2020–ம் ஆண்டு மார்ச் 27–ந் தேதி டெல்லியில் பதிவு செய்யப்பட்டது.


இந்த நிதியத்தின் தலைவராக பிரதமர் இருக்கிறார். பாது காப்பு மந்திரி, உள்துறை மந்திரி மற்றும் நிதி மந்திரி ஆகியோர் அந்த நிதியத்தின் பதவிவழி அறங்காவலர்களாகவும் உள்ளனர். இந்த நிதியத்தின் 2023–2024–ம் ஆண்டு மற்றும் 2024–2025–ம் ஆண்டின் தணிக்கை அறிக்கை வெளியிடப்பட்டு உள்ளது. இதன்படி 2023–2024–ம் ஆண்டில் இருப்புத்தொகை, வட்டி மற்றும் பிற வரவுகள் மூலம் ரூ.7,188.63 கோடியாக இருந்தது.

இது 2024–2025–ம் ஆண்டில் (மார்ச் 31–ந் தேதியன்று) ரூ.8452.94 கோடியாக உயர்ந்துள்ளது. இதில் வட்டி மட்டும் ரூ.469.37 கோடி ஆகும். நன்கொடைகளைப் பொறுத்தவரை முந்தைய ஆண்டைவிட 2024–2025–ம் ஆண்டில் குறைந்துள்ளது. முந்தைய ஆண்டில் உள்நாட்டு நன்கொடை ரூ.681.81 கோடி ஆகும். இது 2024–2025–ம் ஆண்டில் ரூ.479.04 கோடியாக குறைந்துள்ளது. வெளிநாட்டு நன்கொடை முந்தைய ஆண்டு ரூ.1.13 கோடியாக இருந்தது. 2024–2025–ம் ஆண்டு ரூ.92.82 லட்சமாக குறைந்து இருக்கிறது.

பண செலுத்துதல்களைப் பொறுத்தவரை 2024–2025–ம் ஆண்டில் குழந்தைகள் நல திட்டத்துக்கு ரூ.87.84 லட்சம் கொடுக்கப்பட்டு உள்ளது. முந்தைய ஆண்டில் இது ரூ.15.37 கோடியாக இருந்தது. எல்லாம் போக இறுதி இருப்பு 2024–2025–ம் ஆண்டில் ரூ.8 ஆயிரத்து 452 கோடியே 6 லட்சத்து 70 ஆயிரத்து 758 ஆக உள்ளது.

நிவாரண நிதியின் 93% பணம் நிலையான வைப்புத்தொகைகளில் வைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் இந்த நிதியில் பெறப்பட்ட நன்கொடைக்கு ஈடான தொகை 2024–25 ம் ஆண்டில் வட்டியாக கிடைத்துள்ளது.

## அமித்ஷா தலைமையில் தென்மாநில முதல்-மந்திரிகள் மாநாடு: முதல்-அமைச்சர் விஜய் பங்கேற்பு!





சென்னை, ஆக. 19–

மத்திய உள்துறை அமைச்சகம் சார்பில் ஆண்டுதோறும் தென்மாநில முதல்–மந்திரிகள் மாநாடு நடத்தப்படுவது வழக்கம். ஆனால், கடந்த 2022–ம் ஆண்டுக்கு பிறகு இந்த மாநாடு நடைபெறவில்லை. இந்தநிலையில், 31–வது தென்மாநில முதல்–மந்திரிகள் மாநாடு ஆக. 19 (இன்று)) சென்னையை அடுத்த கோவளத்தில் உள்ள நட்சத்திர ஓட்டலில் தொடங்குகிறது.

இந்த மாநாட்டுக்கு மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா தலைமை தாங்குகிறார். இதில் தமிழக முதல்–அமைச்சர் விஜய், கர்நாடக முதல்–மந்திரி டி.கே. சிவக்குமார், கேரளம் முதல்–மந் திரி சதீசன், தெலுங்கானா முதல்–மந்திரி ரேவந்த் ரெட்டி, ஆந்திர முதல்–மந்திரி சந்திரபாபு நாயுடு, புதுச்சேரி முதல்–அமைச்சர் ரங்கசாமி ஆகியோரும் பங்கேற்கிறார்கள்.

மேலும், அந்தந்த மாநில தலைமை செயலாளர்கள், உள்துறை செயலாளர்கள் உள்ளிட்ட உயர் அதிகாரிகளும் கலந்துகொள்கிறார்கள்.

மாநிலங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பு, பொருளாதார வளர்ச்சி, தொழில் முதலீடுகள், கூட்டுறவை பலப்படுத்துவது, கட்டமைப்பு மேம்பாடு, நீர்வள பகிர்வு, கல்வி, சுகாதாரம், தகவல் தொழில்நுட்பம், பேரிடர் மேலாண்மை, குற்றங்கள் தடுப்பு, எல்லை பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறு முக்கிய விவகாரங்கள் குறித்து இந்த மாநாட்டில் விவாதிக்கப்படுகிறது.

தற்போது காவிரி நீர் பங்கீடு விவகாரத்தில் கர்நாடகம் மற்றும் தமிழகம் இடையே முரண்பாடுகள் எழுந்த நிலையில் இந்த கூட்டம் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக மத்திய மந்திரி அமித்ஷா இன்று மாலை 4.50 மணிக்கு டெல்லியில் இருந்து தனி விமானத்தில் சென்னை புறப்படுகிறார். இரவு 7.40 மணிக்கு சென்னை விமான நிலையம் வந்தடைகிறார்.

விமான நிலையத்தில் உயர் அதிகாரிகள் மற்றும் கட்சியினர் வரவேற்கிறார்கள். பின்னர் அவர், காரில் கோவளம் செல்கிறார்.

## ஜார்க்கண்ட்: போராட்டம் முடிவுக்கு வந்தது!





ராஞ்சி, ஆக. 19–

முறைகேடு மற்றும் விதிமீறல் புகார்களைத் தொடர்ந்து, ஜார்க்கண்ட் பொதுப் பணி ஆணையம் (JPSC), ஜார்க்கண்ட் பணியாளர் தேர்வாணையம் (JSSC) ஆகியவை நடத்திய 44 தேர்வுகளை ரத்து செய்வதாக ஜார்க்க ண்ட் அரசு அறிவித்துள்ளது. இதற்கான தேர்வுப் பட்டியலும் வெளியிடப்பட்டு ள்ளது. JSSC நடத்திய ஒருங்கிணைந்த பட்டதாரி நிலைத் தேர்வில் முறைகேடு நடந்ததாகக் கூறி ராஞ்சியில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். JPSC நடத்திய ஒருங்கிணைந்த குடிமைப் பணி முதல்நிலைத் தேர்வையும் ரத்து செய்து, முறைகேடு குறித்து சிபிஐ விசாரணை நடத்த வேண்டும் என மாணவர்கள் வலியுறுத்தினர். மாணவர் அமைப்பு தலைவர் தேவேந்திர நாத் மஹ்தோ கடந்த 1–ம் தேதி முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

போராட்டம் தீவிரமடைந்ததால் JSSC பட்டதாரி நிலைத் தேர்வு ரத்து செய்யப்பட்டது. மேலும், தேர்வில் வெற்றி பெற்ற 2,000–க்கும் மேற்பட்டோர் போராட்டத்தில் ஈடுபடுவோம் என எச்சரித்துள்ளனர்.

இதற்கிடையே அரசு, JPSC/ JSSC முறைகேடு வழக்குகளுக்கு விரைவு நீதிமன்றம் அமைக்க உயர் நீதிமன்றத்திடம் கோரிக்கை, தேர்வு முறைகளை கண்காணிக்க உள் கண்காணிப்புப் பிரிவு, சீர்திருத்தங்களை ஆய்வு செய்ய ஐஏஎஸ் அதிகாரி அமிதாப் கவுஷல் தலைமையில் குழு ஆகியவற்றை அறிவித்துள்ளது. இக்குழுவில் ஒரு புகழ்பெற்ற நிறுவனத்தின் இயக்குநரும் இடம்பெறுவார். குழு 2 மாதங்களில் அறிக்கை அளிக்கும்.

## மேகதாது: விவசாயிகளுக்கு மீண்டும் தலைவலி!




பெங்களூரு, ஆக. 19–

காவிரியின் குறுக்கே மேகதாது அணை அமைக்கும் திட்டத்தை விரைவுபடுத்தும் நடவடிக்கையாக, திருத்தப்பட்ட விரிவான திட்ட அறிக்கையை (DPR) மத்திய நீர் ஆணையத்திடம் கர்நாடக அரசு மீண்டும் சமர்ப்பித்துள்ளது.

முன்னதாக சமர்ப்பிக்கப்பட்ட திட்ட அறிக்கையில் திருத்தங்கள் மேற்கொள்ளுமாறு மத்திய நீர் ஆணையம் அறிவுறுத்தியிருந்த நிலையில், தற்போது திருத்தப்பட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, முதல்வர் சிவக்குமார் தலைமையில் நடைபெற்ற உயர்மட்டக் கூட்டத்தில் மேகதாது திட்டத்தின் தற்போதைய நிலை மற்றும் அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. திட்டத்துக்குத் தேவையான வனத்துறை அனுமதிகளை விரைந்து பெறவும், அணை அமையும் பகுதியில் அகற்றப்படும் மரங்களுக்கு மாற்றாக நிலம் ஒதுக்கி, விதிகளின்படி புதிய மரக்கன்றுகளை நடவும் நடவடிக்கை எடுக்க முடிவு செய்யப்பட்டது.

மேகதாது குடிநீர் மற்றும் மின்சாரத் திட்டத்தை விரைவாக செயல்படுத்த அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக நீர்வளத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கர்நாடகாவின் இந்த நடவடிக்கைக்கு தமிழக அரசு எத்தகைய முடிவு எடுக்கப் போகிறது என்ற எதிர்பார்ப்பு விவசாயிகள் மற்றும் காவிரி கரையோர மக்களிடையே எழுந்துள்ளது.

## வணிக வாகனங்களுக்கு செம சலுகை!

# EV, CNG, LNG வாகனங்களுக்கு ஆயுள் அதிகரிப்பு! 20 ஆண்டுகள் வரை ஓட்ட புதிய திட்டம்!

## 5 ஆண்டுக்கு ஒரே தேசிய அனுமதி!!




புதுடெல்லி, ஆக. 19–

மாசுபாட்டைக் குறைத்து, மாற்று எரிபொருள் வாகனங்களை ஊக்குவிக்கும் வகையில், மின்சார வாகனங்கள் (EV), ஹைட்ரஜன், CNG மற்றும் LNG–யில் இயங்கும் குறிப்பிட்ட வணிக வாகனங்களுக்கான புதிய விதிமுறைகளை மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் முன்மொழிந்துள்ளது.

தேசிய அனுமதி பெற்ற வணிக வாகனங்களின் பயன்பாட்டு வயது வரம்பு தற்போது 12 மற்றும் 15 ஆண்டுகளாக உள்ள நிலையில், அவை முறையே 17 மற்றும் 20 ஆண்டுகளாக உயர்த்தப்பட உள்ளன. புதிய தொழில்நுட்ப வாகனங்களை வாங்குவதற்கான ஆரம்பச் செலவை உரிமையாளர்கள் சமாளிக்க இந்த கூடுதல் காலம் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தேசிய அனுமதி நடைமுறையும் எளிமைப்படுத்தப்பட உள்ளது. Form 46 விண்ணப்பம், Form 47 அனுமதிச் சீட்டு ஆகியவை இனி மின்னணு முறையில் வழங்கப்படும். விருப்பமுள்ளவர்கள் ஒரே நேரத்தில் 5 ஆண்டுகளுக்கான அனுமதியைப் பெறலாம். ஆண்டுக் கட்டணம் ரூ.16,500; 5 ஆண்டுகளுக்கு ரூ.82,500 செலுத்த வேண்டும். வாகன் (VAHAN) போர்ட்டல் மூலம் வாகன ஆவணங்கள் மற்றும் உரிமையாளர் விவரங்கள் டிஜிட்டல் மயமாக்கப்படும். Form 20–ல் ஆதார் இணைக்கப்பட்ட மொபைல் எண்ணை குறிப்பிடுவது கட்டாயமாகும்.

இந்த மாற்றங்களுக்கான வரைவு அறிவிப்பு ஆகஸ்ட் 10–ல் வெளியிடப்பட்டது. 30 நாட்களுக்குள் பொதுமக்கள் கருத்து தெரிவிக்கலாம். இறுதி அரசிதழ் அறிவிப்புக்குப் பிறகே விதிகள் அமலுக்கு வரும். இவை அனைத்து வாகனங்களுக்கும் பொருந்தாது; குறிப்பிட்ட தேசிய அனுமதி பெற்ற வணிக வாகனங்களுக்கு மட்டுமே பொருந்தும்.

## முதல்வர் விஜய்: விதி 110–ல் அதிரடி அறிவிப்புகள்!



சென்னை, ஆக.19–

சட்டப்பேரவையில் விதி 110–ன் கீழ் முதலமைச்சர் ச. ஜோசப் விஜய் வெளியிட்ட முக்கிய அறிவிப்புகள்:

**எம்.எல்.ஏ.க்களுக்கு அரசு வாகனம்:** அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அரசு சார்பில் வாகனம் வழங்கப்படும். வாகனத்துக்கான ஓட்டுநர், எரிபொருள், பராமரிப்புச் செலவுகளுக்கு மாதம் ரூ.75,000 வாகனப் படியும், உதவியாளர் நியமிக்க ரூ.25,000 உதவியாளர் படியும் வழங்கப்படும். இதற்கான சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்படும்.

**மருத்துவக் காப்பீடு:** முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ஆண்டுக்கான காப்பீட்டுத் தொகை ரூ.5 லட்சத்தில் இருந்து ரூ.25 லட்சமாக உயர்த்தப்படும். பெரம்பூரில் ரூ.300 கோடியில் 400 படுக்கைகளுடன் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை அமைக்கப்படும்.

**மருத்துவக் கல்வி:** 7 புதிய அரசு செவிலியர் கல்லூரிகள் தொடங்கப்பட்டு, செவிலியர், மருந்தியல் மற்றும் துணை மருத்துவப் படிப்புகளில் சுமார் 6,098 கூடுதல் இடங்கள் உருவாக்கப்படும்.

**புற்றுநோய் சிகிச்சை:** ரூ.673.44 கோடியில் முதலமைச்சரின் புற்றுநோய் பராமரிப்பு இயக்கம் மேம்படுத்தப்படும். சென்னை, தஞ்சாவூர், கோவை, மதுரை, திருநெல்வேலி, விழுப்புரம் உள்ளிட்ட இடங்களில் புற்றுநோய் சிகிச்சை வசதிகள் விரிவுபடுத்தப்படும். மதுரை ராஜாஜி மருத்துவமனையில் ரூ.84 கோடியில் மண்டல புற்றுநோய் மையம்அமைக்கப்படும்.

தலையங்கம்

மதுரை மணி

புதன்கிழமை 19.08.2026

விசுவாவசு தமிழ் வருடம்

ஆவணி மாதம் 02-ம் தேதி

## குறைந்து வரும் அரசு வேலைகள்... இளைஞர்களின் கனவு?




அரசு வேலை என்பது இன்றும் இந்திய இளைஞர்களின் மிகப்பெரிய கனவாகவே உள்ளது. நிலையான வருமானம், வேலைப் பாதுகாப்பு, சமூக மரியாதை ஆகிய காரணங்களால் ஆண்டுதோறும் லட்சக்கணக்கானோர் அரசு வேலைக்கான போட்டித் தேர்வுகளை எதிர்கொள்கின்றனர். ஆனால், அரசு பணியிடங்களின் எண்ணிக்கை குறைந்து வருவது இளைஞர்களிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஆண்டு ரயில்வே குரூப்–டி பணிக்கு 32,438 காலியிடங்கள் அறிவிக்கப்பட்ட நிலையில், சுமார் 15.6 லட்சம் பேர்விண்ணப்பித்துள்ளனர். ஒரு பணியிடத்திற்கு சராசரியாக 48 பேர் போட்டியிடும் நிலை உருவாகியுள்ளது.

அதுமட்டுமின்றி, தேர்வு அறிவிப்பு வெளியானது முதல் பணி நியமனம் வரை 3 முதல் 4 ஆண்டுகள் வரை காலதாமதம் ஏற்படுவதால், பலர் வயது வரம்பை கடந்து வாய்ப்பை இழக்கும் சூழலும் உள்ளது.

அரசு ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியச் செலவுகள் அதிகரித்திருப்பதும், போதிய வரி வருவாய் இல்லாததும் புதிய பணியிடங்களை உருவாக்குவதில் சிக்கலை ஏற்படுத்துவதாக பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர்.

இதன் காரணமாக நிரந்தர பணியிடங்களுக்கு பதிலாக ஒப்பந்தப் பணியாளர்கள் நியமிக்கப்படும் போக்கு அதிகரித்து வருகிறது. 2025–ம் நிதியாண்டில் மட்டும் 10 லட்சத்துக்கும் மேற்பட்டோர் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசு வேலைக்காக பல ஆண்டுகள் காத்திருக்கும் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில், காலிப் பணியிடங்களை விரைந்து நிரப்புவதும், நிரந்தர வேலைவாய்ப்புகளை அதிகரிப்பதும் காலத்தின் கட்டாயம். இல்லையெனில், கோடிக்கணக்கான இளைஞர்களின் அரசு வேலை கனவு கேள்விக்குறியாகும்.

## திருவண்ணாமலை கோயிலில் செப்.1 முதல் செல்போனுக்கு தடை!




திருவண்ணாமலை, ஆக. 19–

உலகப் புகழ்பெற்ற திருவண்ணாமலை அண்ணாமலையார் திருக்கோயிலில் செப்டம்பர் 1 முதல் பக்தர்கள் செல்போன்களை கோயிலுக்குள் எடுத்துச் செல்ல முழுமையாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கோயிலின் புனிதம், ஆன்மிகச் சூழல் மற்றும் அமைதியைப் பாதுகாக்கவும், சாமி சன்னதிகள் மற்றும் பிரகாரங்களில் செல்ஃபி, வீடியோ, ரீல்ஸ் எடுப்பதைத் தடுக்கவும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பக்தர்களின் வழிபாட்டில் கவனம் சிதறாமல் இருப்பதற்கும், கோயில் வளாகத்தின் ஒழுங்கை பாதுகாப்பதற்கும் இந்து சமய அறநிலையத்துறை இந்த அதிரடி உத்தரவை பிறப்பித்துள்ளது.

## TNPSC முதல் UPSC வரை ஒரே செயலி!




சென்னை, ஆக. 19–

தமிழகத்தில் அரசுப் பணி போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் இளைஞர்களுக்காக "வெற்றிப் பாதை" என்ற புதிய மொபைல் செயலி உருவாக்கப்படும் என மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் சரத்குமார் சட்டப்பேரவையில் அறிவித்தார். ரூ.20 லட்சம் மதிப்பீட்டில் உருவாக்கப்படும் இந்த செயலியில் TNPSC, TNUSRB, TRB மட்டுமின்றி UPSC, SSC, RRB, IBPS உள்ளிட்ட மத்திய அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் போட்டித் தேர்வுகளுக்கான பாடத்திட்டம், தேர்வு அறிவிப்புகள், வழிகாட்டுதல்கள் இடம்பெறும்.

தனியார் பயிற்சி மையங்களுக்குச் செல்ல முடியாத கிராமப்புற மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய இளைஞர்களுக்கு இந்த செயலி பயனுள்ளதாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழக அரசு பெண் ஊழியர்களின் மூன்றாவது குழந்தைப் பேறுக்கான மகப்பேறு விடுப்பு 12 வாரங்களில் இருந்து 365 நாட்களாக உயர்த்தப்படும் என்றும் அமைச்சர் அறிவித்தார்.

## மீனாட்சி அம்மன் கோவில் கும்பாபிஷேக யாக பூஜைகள் 6-ந் தேதி தொடக்கம்!



மதுரை, ஆக. 19–

மதுரை மீனாட்சி அம்மன் கோவில் கும்பாபிஷேக விழா அடுத்த மாதம் (செப்டம்பர்) 17–ந் தேதி வெகு விமரிசையாக நடக்கிறது. இதையொட்டி விழா ஏற்பாடுகள் குறித்த ஆலோசனை கூட்டம் கலெக்டர் நிஷாந்த் கிருஷ்ணா தலைமையில் போலீஸ் கமிஷனர் ராஜேந்திரன், போலீஸ் சூப்பிரண்டு தேவநாதன், மாநகராட்சி கமிஷனர் கவுரவ்குமார் ஆகியோர் முன்னிலையில் நேற்று நடந்தது. கூட்டத்தில், மீனாட்சி அம்மன் கோவில் கும்பாபிஷேக விழா அடுத்த மாதம் 6–ந் தேதி தொடங்கி அக்டோபர் மாதம் 2–ந் தேதி வரை நடைபெறுகிறது. 6–ந் தேதி முதல் 16–ந் தேதி வரை கும்பாபிஷேக விழாவுக்கான யாகசாலை பூஜைகள், 16–ந் தேதி பரிவார மூர்த்திகள் கும்பாபிஷேகம், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல் நடக்கிறது. 17–ந் தேதி காலை 7.40 மணிக்கு மேல் 8.10 மணிக்குள் கும்பாபிஷேகம் நடக்கிறது.

18–ந் தேதி முதல் அக்டோபர் 2–ந் தேதி வரை மண்டல பூஜைகள் நடப்பதாக அறிவிக்கப்பட்டது. இந்த விழாவை எவ்வித சட்டம்–ஒழுங்கு பிரச்சினையின்றி பாதுகாப்பான முறையில் நடத்தி முடித்திட ஒவ்வொரு துறை அலுவலர்களும் செய்ய வேண்டிய பணிகள் குறித்து கலெக்டர் விளக்கி கூறினார்.

கும்பாபிஷேகத்தை காண லட்சக்கணக்கான பக்தர்கள் வருவார்கள் என்பதால் அவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்குவதை போலீசார் உறுதி செய்ய வேண்டும். தேவையான இடங்களில் கண்காணிப்பு கேமரா, கட்டுப்பாட்டு அறை அமைத்தல், கூட்ட நெரிசல் ஏற்படாதவாறு தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். வாகன நெரிசல் ஏற்படாதவாறு போக்கு வரத்தை உறுதி செய்ய வேண்டும். கோவில் பகுதி மிகவும் நெருக்கமாக போதிய இடவசதியின்றி உள்ளதால் ஆம்புலன்ஸ், தீயணைப்பு வாகனம் உள் ளிட்டவை வந்து செல்ல முன் ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

கும்பாபிஷேகத்தினை கண்டு தரிக்கும் வகையில் தேவையான இடங்களில் எல்.இ.டி. திரைகள் அமைக்க வேண்டும். யாகசாலை பூஜைகளின் போது தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்திட வேண்டும். இதே போன்று மாநகராட்சி, மருத்துவத்துறை, இந்து சமய அறநிலையத்துறை, மின்சாரத் துறை, தீயணைப்புத்துறை, நெடுஞ்சாலைத்துறை, உணவுப்பாதுகாப்புத்துறை, வருவாய்த்துறை என அனைத்து துறை சார்பில் தகுந்த ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.

## தமிழகம் முழுவதும் லஞ்ச ஒழிப்பு வேட்டை!




சென்னை, ஆக. 19–

சென்னையில் செயல்பட்டு வரும் கணினி நிறுவனத்தில் வருமானவரித்துறை அதிகாரிகள் நேற்று திடீர் சோதனையில் ஈடுபட்டனர். இந்த நிலையில், டிரான்ஸ்பார்மர் கொள்முதல் முறைகேடு வழக்கு தொடர்பாகத் தமிழகம் முழுவதும் 40–க்கும் மேற்பட்ட இடங்களில் லஞ்ச ஒழிப்புத்துறையினர் சோதனை நடத்தி வருகின்றனர்.

சென்னை, ஆழ்வார்பேட்டை, டி.டி.கே. சாலையில் செயல்பட்டு வரும் கணினி தொழில்நுட்பத் தொடர்பு நிறுவனத்தில் வருமான வரித்துறை அதிகாரிகள் நேற்று திடீர் சோதனையில் ஈடுபட்டனர்.

கணினி உதிரி பாகங்கள் விற்பனை செய்யும் இந்த நிறுவனத்திற்கும் வெளிநாட்டு நிறுவனங்க ளுக்கும், இந்தியாவின் சிறிய நிறுவனங்களுக்கும் இடையே நடந்த நிதிப் பரிமாற்றங்களில் உள்ள முறைகேடுகள் மற்றும் புகார்களின் அடிப்படையில் இந்தச் சோதனை நடத்தப்பட்டது.

இந்த நிறுவனத்துக்கு தொடர்புடைய எர்ணாவூர், ஆழ்வார்பேட்டை, விருகம்பாக்கம், ராஜமங்கலம் உள்ளிட்ட 5 இடங்களில் சோதனை நடந்தது. அனைத்து இடங்களிலும் ஆயுதம் ஏந்திய போலீஸ் பாதுகாப்புடன் அதிகாரிகள் தீவிர ஆவணச்சரிபார்ப்பு உள்ளிட்ட சோதனையில் ஈடுபட்டனர்.

வரி செலுத்தாமல் வருவாயை மறைத்ததாக வந்த புகார்களின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வரி ஏய்ப்பு தொடர்பாக எழுந்த இந்த புகார்கள் மற்றும் கணக்கில் வராத நிதிப் பரிமாற்றங்கள் தொடர்பான ஆவணங்களைச் சரிபார்க்க இந்தச் சோதனைகள் நடத்தப்பட்டன. அதன்படி கணினி பதிவுகள் மற்றும் நிதி ஆவணங்கள் அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டன. சோதனை முடிவில் பறிமுதல் செய்யப்பட்ட ஆவணங்கள் மதிப்பு, ரொக்கம் உள்ளிட்டவை தெரிய வரும் என்று வருமானவரித்துறை அதிகாரிகள் கூறினர். இந்த நிலையில், சென்னையில் இன்று டிரான்ஸ்பார்மர் கொள்முதல் முறைகேடு வழக்கு தொடர்பாகத் தமிழகம் முழுவதும் 40–க்கும் மேற்பட்ட இடங்களில் லஞ்ச ஒழிப்புத்துறையினர் சோதனை நடத்தி வருகின்றனர். இதில் சென்னையில் மட்டும் பெருங்குடி (4 இடங்கள்), அண்ணா நகர் (3 இடங்கள்) உள்பட 27 இடங்களிலும், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களிலும் சோதனை நடத்தப்பட்டு வருகிறது. மேலும், 10–க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளிலும் இந்தச் சோதனை நடத்தப்பட்டு வருகிறது.

## டாஸ்மாக் கடைகளில் காலி மது பாட்டில்களை நேரடியாக வாங்க புதிய வசதி!




சென்னை, ஆக. 19–

டாஸ்மாக் கடைகளில் காலி மதுபாட்டில்களை திரும்பப் பெறும் திட்டத்தின் கீழ், ஒரு பாட்டிலுக்கு ரூ.10 டெபாசிட் வசூலிக்கப்ப டுகிறது. காலி பாட்டில்களை வாங்கிய கடையிலோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மையங்களிலோ திரும்ப ஒப்படைப்பதன் மூலம், ரூ.10–ஐ திரும்பப் பெற்றுக் கொள்ள முடியும்.

இத்திட்டத்தை டாஸ்மாக் ஊழியர்கள் கையாளும் நடைமுறைக்கு எதிர்ப்பு எழுந்ததையடுத்து, இத்திட்டம் முற்றிலும் மறு சீரமைக்கப்பட்டு மாற்றியமைக்கப்படும் என ஐகோர்ட்டில் தமிழக அரசு தெரிவித்திருந்தது. டாஸ்மாக் பணியாளர்கள் அல்லாத பிற நபர்களைக் கொண்டு பாட்டில்களை திரும்பப் பெறுவது உள்ளிட்ட திட்டங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இந்த சூழலில் தானியங்கி கருவியில் காலி பாட்டிலை வாங்கவும், அதன் வாயிலாக, 10 ரூபாயை திரும்ப வழங்கவும் டாஸ்மாக் முடிவு செய்தது. சோதனை ரீதியாக பீரோ வடிவில் உள்ள தானியங்கி கருவி, சென்னை எழும்பூரில் உள்ள ஒரு மது கடையில் வைக்கப்பட்டது. அந்த கருவி பாட்டிலை தானாகவே உள்ளே எடுத்துக்கொள்ளும். பின்னர் யு.பி.ஐ., கணக்கிற்கு காலி பாட்டிலுக்கான தொகை செலுத்தப்படும். பெரும்பாலான டாஸ்மாக் கடைகள் போதிய இடவசதி இல்லாமல், குறைந்த சதுர அடியில் இயங்கி வருகின்றன.

அந்த கடைகளில் பீரோ வடிவிலான தானியங்கி கருவிகளை வைக்க இடம் இல்லை. எனவே குறைந்த இட வசதியுடன் தினமும் 10 லட்சம் ரூபாய்க்கு மேல் மது வகைகள் விற்பனையாகும் கடைகளில் 'பாஸ்ட் ஸ்கேனர்' எனப்படும் கருவியில் நேரடியாக வாகனங்களில், காலி பாட்டில்கள் வாங்கப்பட உள்ளன. இது சென்னை திருவல்லிக்கேணி மற்றும் எழும்பூரில் தலா ஒரு கடையில் சோதனை ரீதியாக வைக்கப்பட்டு பாட்டில்கள் வாங்கப்பட்டு வருகின்றன.

அதன்படி, வாகனத்தில் ஸ்கேனர் கருவியுடன் பணியாளர் இருப்பர். அவரிடம் காலி பாட்டிலை கொடுத்ததும் அதில் ஒட்டப்பட்டுள்ள ஸ்டிக்கரை கருவியில் ஸ்கேன் செய்து பாட்டிலை பெற்று கொண்டு 10 ரூபாய் திரும்ப வழங்குவர். இதன் வாயிலாக ஒரு நாளைக்கு 8 ஆயிரம் பாட்டில்களை திரும்ப பெற முடியும் என்று கூறப்படுகிறது. வாகனத்தில் சேகரிக்கப்படும் காலி பாட்டில்கள், டாஸ்மாக் நியமிக்கும் ஒப்பந்ததாரர்களிடம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருப்பூரில் வீ த லீடர்ஸ் சார்பில் விழிப்புணர்வு பேரணி!




திருப்பூர், ஆக. 19–

திருப்பூரில் வீ த லீடர்ஸ் அமைப்பு சார்பில் சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்தும் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற இந்த பேரணியை இயற்கை விவசாயியும் சுற்றுச்சூழல் ஆர்வலருமான சட்டையில்லா சாமியப்பன் கொடி அசைத்து தொடங்கி வைத்தார்.முன்னதாக கோவை குளங்கள் பாதுகாப்பு அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மணிகண்டன் சிறப்புரையாற்றினார். தொடர்ந்து தூய்மை பணியாளர்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு தொடங்கிய பேரணி, பல்லடம் சாலை, சந்தைப்பேட்டை, தென்னம்பாளையம் உள்ளிட்ட பகுதிகள் வழியாகச் சென்று மீண்டும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை வந்தடைந்தது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு, குப்பை இல்லாத திருப்பூர், நெகிழி இல்லாத திருப்பூர் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி பங்கேற்பாளர்கள் விழிப்புணர்வு பதாகைகளுடன் கோஷங்களை எழுப்பியபடி ஊர்வலமாக சென்றனர்.



ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை நகராட்சி சுகாதார ஆய்வாளர் பரகத்துல்லா சிறப்பாகப் பணியாற்றியதற்காக 80வது சுதந்திர தின விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் சிவகுரு பிரபாகரன் நற்சான்றிதழ் வழங்கி கௌரவித்தார்



## அனைத்து பிரச்சனைகளும் தீர சக்தி வாய்ந்த பரிகாரங்கள்!




வாழ்க்கையில் ஏற்படும் பல்வேறு துன்பங்கள், பிரச்சனைகளில் இருந்து நிவாரணம் பெற, சில எளிய ஆன்மிக பரிகாரங்களை தொடர்ந்து செய்து வரலாம் என்பது நம்பிக்கை. அருகிலுள்ள சிவன் கோயிலுக்குச் சென்று வாரம் ஒருமுறை சிவபெருமானுக்கு பால் அபிஷேகம் செய்து, ருத்ராபிஷேக மந்திரத்தை ஜபிக்கலாம். இதை தொடர்ந்து 11 வாரங்கள் செய்வது சிறப்பான பலனைத் தரும் எனக் கூறப்படுகிறது. குறிப்பாக திங்கட்கிழமைகளில் இந்த வழிபாட்டை மேற்கொள்வது விசேஷமாக கருதப்படுகிறது.

ருத்ர மந்திரத்தை தினமும் காலை, மாலை நேரங்களில் 9 அல்லது 27 முறை ஜபிப்பது கிரக தோஷங்கள் உள்ளிட்ட தோஷங்கள் நீங்கி, மனத் தெளிவு கிடைக்க உதவும் என்பது ஆன்மிக நம்பிக்கை.

உறவினர்களால் ஏற்படும் பிரச்சனைகள் நீங்க, மாதத்தில் ஒரு வியாழக்கிழமை ஏழைகளுக்கு அரிசி, கடலைப் பருப்புபோன்றவற்றை தானமாக வழங்கலாம். பொருளாதார நெருக்கடிகள் மற்றும் அலைச்சல்கள் குறைய, வளர்பிறை இரவில் சந்திரனை வழிபட்டு, சந்திர மந்திரத்தை 11 முறை சொல்லலாம்.

கோயிலில் அதிகாலை, உச்சிவேளை, மாலை என மூன்று வேளைகளிலும் தீபம் ஏற்றி வழிபடுதல் சிறப்பானதாக கருதப்படுகிறது. கடுமையான பிரச்சனைகளுக்கு நெய் தீபம் ஏற்றலாம். கண்திருஷ்டி தொடர்பான நம்பிக்கைகளுக்கு வாரம் ஒருமுறை கல் உப்பை குளிக்கும் நீரில் கலந்து குளிக்கலாம். கடன் உள்ளிட்ட தடைகளுக்கு தேங்காய் எண்ணெய், விளக்கெண்ணெய் கலந்து தேங்காயில் தீபம் ஏற்றும் வழக்கமும் உள்ளது.

## ஆகஸ்ட் 28 சந்திர கிரகணம்




2026–ம் ஆண்டின் கடைசி சந்திர கிரகணம் ஆகஸ்ட் 28–ம் தேதி நிகழ உள்ளது. இது பகுதி சந்திர கிரகணமாக இருக்கும். கிரகணம் இந்திய நேரப்படி காலை முதல் பகல் நேரத்தில் நிகழ்வதால் இந்தியாவில் இதைப் பார்க்க முடியாது.

கிரகணம் காலை 6.53 மணிக்கு தொடங்கி, காலை 8.03 மணிக்கு பகுதி கிரகணமாக மாறும். காலை 9.42 மணிக்குஉச்சத்தை அடைந்து, மதியம் 12.31 மணிக்கு நிறைவடையும்.

ஐரோப்பா, ஆசியாவின் மேற்கு பகுதிகள், ஆப்பிரிக்கா, வட மற்றும் தென் அமெரிக்கா உள்ளிட்ட பல பகுதிகளில் கிரகணத்தை காண முடியும்.

இந்தியாவில் கிரகணம் தெரியாததால் சூதக காலம் கிடையாது. எனவே, இந்தியாவில் வழக்கமான அன்றாட பணிகள் மற்றும் சுப காரியங்களை மேற்கொள்ள எந்தத் தடையும் இல்லை.

**குறிப்பு:** கிரகண நேரத்தில் உணவு, தண்ணீர் உள்ளிட்டவற்றைத் தவிர்ப்பது போன்றவை பாரம்பரிய நம்பிக்கைகளுடன் தொடர்புடையவை; இந்தியாவில் இதற்கான கட்டுப்பாடுகள் இல்லை.

## தேசிய கைத்தறி தினம்: உதவி இயக்குனர் வெங்கடேசலு தலைமையில் மருத்துவ முகாம்!



ஈரோடு, ஆக. 19–

ஈரோடு மாவட்டம் சென்னிமலை அருகே உள்ள முகாசி பிடாரியூர் காமாட்சி அம்மன் திருமண மண்டபத்தில் 12வது தேசிய கைத்தறி தினத்தை முன்னிட்டு சென்னிமலை சரகத்தில் உள்ள அனைத்து கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் சார்பில் சரக உதவி இயக்குனர் ஆர்.சித்ரா (செயலாட்சியர்) ஏற்பாட்டின் பேரில் நெசவாளர்களின் துயரை போக்குகின்ற வகையில் அவர்களது குடும்பத்தினருக்கு இலவச முழு உடல் பரிசோதனை முகாம் நடைபெற்றது. இம்முகாமை ஈரோடு மாவட்ட கைத்தறி மற்றும் துணி நூல் துறை உதவி இயக்குனர் வெங்கடேசலு துவக்கி வைத்து பார்வையிட்டார். மருத்துவ முகாமில் பொது மருத்துவம், சர்க்கரை நோய், கண் பரிசோதனை, காது, மூக்கு, தொண்டை, மகளிர் மருத்துவம், காசநோய் பரிசோதனை சித்த மருத்துவம், இ.சி.ஜி, ஸ்கேன், இரத்த பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்நிகழ்ச்சியில் டி சி ஒ உள்ளிட்ட சென்னிமலை அனைத்து கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் மேனேஜர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்

# இதய நோய் வராமல் தடுக்க 5 எளிய பழக்கங்கள்!



இதய நோய் மற்றும் பக்கவாதம் உள்ளிட்ட இருதய நோய்களில் பெரும்பாலானவற்றை வாழ்க்கைமுறையில் சில மாற்றங்களைச் செய்வதன் மூலம் தடுக்க முடியும் என கூறப்படுகிறது. அமெரிக்க மருத்துவர் டாக்டர் வாஸ், இதய ஆரோக்கியத்தை பாதுகாக்க உதவும் 5 பழக்கங்களை பரிந்துரைத்துள்ளார்.

1. உணவுக்குப் பின் 10 நிமிடம் நடக்கவும்: சாப்பிட்ட பிறகு நடப்பது ரத்தச் சர்க்கரை மற்றும் உடலில் ஏற்படும் அழற்சியைக் குறைக்க உதவும்.

2. ஒமேகா-3 அதிகம் எடுத்துக்கொள்ளவும்: சால்மன் போன்ற மீன்கள் உள்ளிட்ட ஒமேகா-3 உணவுகள் டிரைகிளிசரைடு அளவையும் ரத்த நாளங்களில் ஏற்படும் அழற்சியையும் குறைக்க உதவலாம்.

3. போதுமான தூக்கம்: தினமும் சுமார் 8 மணி நேரம் தூங்குவது முக்கியம். தூக்கக் குறைபாடு இதயப் பிரச்சனைகளின் அபாயத்தை அதிகரிக்கலாம்.

4. பிளாஸ்டிக்கை தவிர்க்கவும்: உணவை பிளாஸ்டிக் பாத்திரங்களில் சூடாக்காமல், கண்ணாடிப் பொருட்களைப் பயன்படுத்துவது நல்லது.

5. தேவையான பரிசோதனைகள்: கொழுப்பு அளவை மட்டுமின்றி, ApoB, Lp(a), Homocysteine, hs-CRP போன்ற இதய அபாயக் குறியீடுகளையும் மருத்துவர் ஆலோசனையுடன் பரிசோதிக்கலாம்.

**குறிப்பு:** இவை பொதுவான தகவல்கள் மட்டுமே. உடல்நிலை தொடர்பான மாற்றங்கள் அல்லது பரிசோதனைகளுக்கு மருத்துவரின் ஆலோசனை அவசியம்.


# சற்று குறைந்த தங்கம் விலை!



சென்னை, ஆக. 19-


இந்த வாரத்தில் தொடக்கத்தில் இருந்து அதாவது கடந்த 2 நாட்களாக சற்று உயர்ந்து வந்த தங்கம் விலை இன்று குறைந்துள்ளது. அதன்படி, கிராமுக்கு 85 ரூபாய் குறைந்து ஒரு கிராம் ரூ.14,205-க்கும் சவரனுக்கு 680 ரூபாய் குறைந்து ஒரு சவரன் ஒரு லட்சத்து 13 ஆயிரத்து 640-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

தங்கத்தை போலவே வெள்ளி விலையும் குறைந்துள்ளது. வெள்ளி விலை கிராமுக்கு 5 ரூபாய் குறைந்து ஒரு கிராம் 250 ரூபாய்க்கும் பார் வெள்ளி 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனையாகிறது. கடந்த 5 நாட்களாக விலைமாற்றமின்றி விற்பனையான வெள்ளி விலை இன்று சற்று குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.



## சினிமா துளிகள்..!

# முன்பதிவிலேயே ஆயிரம் கோடி வசூலித்த அவெஞ்சர்ஸ் - டூம்ஸ் டே!



அவெஞ்சர்ஸ் - டூம்ஸ் டே திரைப்படம் டிக்கெட் முன்பதிவிலேயே மிகப்பெரிய தொகையை வசூலித்துள்ளது.

அவெஞ்சர்ஸ் - இன்ஃபினிட்டி வார் மற்றும் அவெஞ்சர்ஸ் - எண்ட் கேம் ஆகிய படங்களை இயக்கிய ரஸ்ஸோ சகோதரர்களின் இயக்கத்தில் உருவான மார்வெல் ஸ்டுடியோஸ் நிறுவனத்தின் புதிய படம் "அவெஞ்சர்ஸ் - டூம்ஸ்டே".

மார்வெல் காமிக்ஸ் கதைகளின் சூப்பர் வில்லனான "டாக்டர் டூம்" கதாபாத்திரத்தை முதன்மையாகக் கொண்டு உருவாகியுள்ள இந்தப் படம் மார்வெல் ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

அயர்ன் மேன் கதாபாத்திரத்தில் நடித்து உலகம் முழுவதும் கோடிக்கணக்கான ரசிகர்களை ஈர்த்த நடிகர் ராபர்ட் டௌனி ஜூனியர் இப்படத்தில் டாக்டர் டூம் கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

இப்படம் டிச. 18 ஆம் தேதி உலக அளவில் வெளியாகவுள்ள நிலையில், டிக்கெட் முன்பதிவிலேயே இப்படம் இந்தியாவில் ரூ. 950 கோடியை வசூலித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. படம் வெளியாக இன்னும் 4 மாதங்கள் உள்ள நிலையில் அசாதாரணமாக இவ்வளவு கோடிகளை ஈட்டியுள்ளது ரசிகர்களிடம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

# வெளிநாட்டு பணம்: அதிரடி சோதனை!



சென்னை, ஆக. 19-

சந்தேகத்திற்குரிய வெளிநாட்டு பணப் பரிமாற்றங்கள் குறித்து வருமான வரித்துறை நாடு தழுவிய விரிவான சரிபார்ப்பு நடவடிக்கையைத் தொடங்கியுள்ளது. குறிப்பாக, நாடு முழுவதும் கடந்த 3 ஆண்டுகளில் அதிகப்படியான அந்நிய செலாவணியை வெளிநாடுகளுக்கு அனுப்பிய சந்தேகத்திற்குரிய நிறுவனங்களை உளவுத்துறை மற்றும் தரவு பகுப்பாய்வு மூலம் வருமான வரித்துறை கண்டறிந்துள்ளது.

போலி அறக்கட்டளைகள் மூலம் நிதி பரிமாற்றம் செய்த நிறுவனங்கள், வருமான வரி தாக்கல் செய்யாதவை அல்லது மிகக்குறைந்த வருவாயைக் காட்டி வருமான வரி தாக்கல் செய்பவை என்பது கள ஆய்வில் தெரியவந்துள்ளது. இந்த நிறுவனங்கள் அறிவிக்கப்பட்ட முகவரிகளில் செயல்படவில்லை என்பதும், சரக்கு போக்குவரத்து, மென்பொருள் இறக்குமதி போன்ற பரிமாற்ற காரணங்கள் உண்மையானவை அல்ல என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட தொழில் வல்லுநர்களால் அதிக எண்ணிக்கையிலான படிவம் 15 சிபி சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளதை வருமான வரித்துறை கவனித்துள்ளது. இந்த சான்றிதழ்களை வழங்கும் கணக்காளர்கள் போதிய விடாமுயற்சி மேற்கொள்ளவில்லை. தற்போது சுமார் 394 நிறுவனங்கள் மற்றும் 36 தொழில் வல்லுநர்கள் மீது இந்த சரிபார்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

நில எல்லை மாவட்டங்களில் உள்ள நிறுவனங்களும் இதில் அடங்கும். சான்றிதழ்களை வழங்கும் கணக்காளர்கள், பணப் பரிமாற்றங்களைச் சான்றளிக்கும் முன் உண்மைகளை முறையாக ஆய்வு செய்ய வேண்டும் என்று வருமான வரி கமிஷனர் வி.ரஜிதா வலியுறுத்தியுள்ளார். இதுதொடர்பான விசாரணைகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

# ரேஷன் கடைகளுக்கு எடை குறைவாக வரும் அரிசி மூட்டைகள்!



சென்னை, ஆக. 19-

தமிழகத்தில் உள்ள பெரும்பாலான ரேஷன் கடைகளில், பொதுமக்களுக்கு உரிய எடையில் அரிசி வழங்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு பரவலாக உள்ளது. ஆனால், இதுகுறித்து ரேஷன் கடை பணியாளர்களிடம் கேள்வி கேட்டால், "எங்களுக்கே அரிசி மூட்டை எடை குறைவாகத்தான் வருகிறது. அப்படி இருக்கும்போது, உரிய எடையில் எப்படி பொதுமக்களுக்கு அரிசியை வழங்க முடியும்" என்று வருத்தம் தெரிவித்தனர்.

சமீபத்தில் காஞ்சீபுரம் மாவட்டத்தில் உள்ள நெல் அரவை ஆலைகளில் பல கோடி ரூபாய் அளவுக்கு முறைகேடு நடந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டு, அதற்கு காரணமான அரசு அதிகாரிகளும் சஸ்பெண்டு செய்யப்பட்டுள்ளனர்.

50 கிலோ எடை கொண்ட அரிசி மூட்டையின் அளவு ஒரு பக்கம் குறைகிறது என்றால், மற்றொரு பக்கம் தரமான அரிசியாக இருப்பதில்லை என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்படுகிறது.

அதாவது, "நல்ல தரமான அரிசியை வெளிச்சந்தைக்கு திருப்பி விட்டுவிட்டு, தரமில்லாத, பழைய அரிசியை ரேஷன் கடைகளுக்கு அனுப்பப்படுகிறது. அதுவும் எடை குறைவாகவே வழங்கப்படுகிறது" என்ற புகார் பல ஆண்டுகளாக உள்ளது.

அதனால், நெல் கொள்முதலில் தொடங்கி நெல் அரவை, கிடங்கு, போக்குவரத்து, ரேஷன் கடை என முழு விநியோக சங்கிலியையும் கண்காணிக்க வேண்டும் என்று பொதுமக்கள் அரசுக்கு குறிப்பாக உணவுத்துறை அமைச்சருக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தங்கச் சுரங்கம் இடிந்து பயங்கர விபத்து: 30 பேர் பலி!



பாங்கி, ஆக. 19-

மத்திய ஆப்பிரிக்க குடியரசின் நானா-மாம்பேரே மாகாணத்தில் உள்ள அப்பா பிராந்தியத்தில் தங்கச் சுரங்கம் ஒன்று செயல்பட்டு வருகிறது. தொழிலாளர்கள் சுரங்கத்தினுள் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அப்போது, எதிர்பாராதவிதமாக திடீரென்று மண் மற்றும் பாறைகள் சரிந்து விழுந்து சுரங்கம் முற்றிலும் இடிந்தது. இந்த விபத்து ஏற்பட்டதில் 30 தொழிலாளர்கள் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும், பலர் படுகாயமடைந்தனர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த மீட்புக் குழுவினர், பொதுமக்களுடன் இணைந்து மீட்புப் பணியைத் தொடங்கினர். உயிரிழந்த 30 தொழிலாளர்களின் உடல்கள் மீட்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து படுகாயமடைந்த வர்கள் மீட்கப்பட்டு அருகில் உள்ள ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டனர். இடிபாடுகளுக்குள் இன்னும் சிலர் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுவதால், உள்ளூர் மக்களும் மீட்புக் குழுவினரும் இணைந்து தொடர்ந்து தேடுதல் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். பாதுகாப்பற்ற மற்றும் முறையான தொழில்நுட்ப வசதிகள் இல்லாத பாரம்பரிய சுரங்க முறையில் இங்கு தங்கம் வெட்டியெடுக்கப்பட்டு வந்ததே இந்த விபத்திற்குக் காரணம் என பொதுமக்கள் குற்றம் சாட்டினர். மத்திய ஆப்பிரிக்கக் குடியரசில் இதுபோன்ற உரிமம் பெறாத, ஆபத்தான சுரங்க விபத்துகள் தொடர்கதையாகி வருவது குறிப்பிடத்தக்கது.

# கொல்கத்தா: ஓட்டலில் தீ விபத்து; 9 பேர் பலி!



கொல்கத்தா, ஆக. 19-

மேற்குவங்க மாநிலம் கொல்கத்தாவில் உள்ள மிர்சா காலிப் தெருவில் உள்ள ஓட்டலில் அதிகாலை 2 மணியளவில் திடீரென பெரும் தீ விபத்து ஏற்பட்டது.

இந்த தீ விபத்தில் சிக்கி ஒரு குழந்தை உட்பட 9 பேர் பலியாகி உள்ளனர். 6 பேர் காயமடைந்தனர். பலியானவர்கள் வங்காளதேச நாட்டினர் என முதல்கட்ட விசாரணையில் தெரிய வருகிறது. வங்காளதேசத்தில் இருந்து மருத்துவ சிகிச்சைக்காக அவர்கள் இந்தியாவுக்கு வந்துள்ளனர்.

அப்போது தீ விபத்தில் சிக்கி உயிரிழந்து உள்ளனர். புகையை சுவாசித்தபோது, அதன் பாதிப்பால் மயக்கமடைந்த பலர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு உள்ளனர். இந்த தீ விபத்துக்கான காரணம் என்னவென்று உடனடியாக தெரிய வரவில்லை. அதுபற்றி விசாரிக்கப்பட்டு வருகிறது.

# 44.2 % பெண்களுக்கு உடல் பருமன்: மக்கள் நல்வாழ்வுத்துறை!



சென்னை, ஆக. 19-

உலகளாவிய ஆய்வின்படி, தமிழகத்தில் நிகழும் மொத்த இறப்புகளில் 75 சதவீத உயிரிழப்புகளுக்கு தொற்றா நோய்களே காரணமாக உள்ளன. குறிப்பாக, இதய நோய்கள், புற்றுநோய், சர்க்கரை நோய், சிறுநீரக பாதிப்புகள், சுவாச நோய்களுக்குள்ளானோரின் எண்ணிக்கை பல மடங்கு அதிகரித்துள்ளது.

சீரற்ற உணவுப் பழக்கம், உடற்பயிற்சியின்மை, உடல் உழைப்பின்மை, துரித உணவுகள் உள்ளிட்டவை உடல் பருமனுக்கு வித்திடுகிறது. அதன் தொடர்ச்சியாக தொற்றா நோய்கள் உருவாகின்றன.

இந்த நிலையில், தேசிய குடும்ப சுகாதார கணக்கெடுப்பின்படி அதிக எடை, உடல் பருமனால், 44.2 சதவீத பெண்களும், 38.8 சதவீத ஆண்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக தமிழக மக்கள் நல்வாழ்வு துறை தெரிவித்துள்ளது.

இது குறித்து துறை அதிகாரிகள் கூறியதாவது: தமிழகத்தில் உயர் ரத்த அழுத்த பாதிப்புகள் 29.4 சதவீதமாகவும், சர்க்கரை நோய், 19.5 சதவீதமாகவும் உள்ளது. பெரும்பாலான மக்களுக்கு சீரான வாழ்க்கை முறை இல்லை. துரித உணவு, புகையிலை பயன்பாடு, மதுபழக்கம் ஆகியவை தொற்றா நோய்க்கு முக்கிய காரணங்களாக உள்ளன.

இந்த நிலை நீடித்தால், பத்தாண்டுகளில் தொற்றா நோயால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரிக்கும். மேலும் தொற்றா நோயால் ஏற்படும் இறப்பு விகிதம் 80 சதவீதத்தைத் தாண்டும் என அவர்கள் கூறினர்.

ஆண்களுக்கு உயர் ரத்த அழுத்தம் 28.2%-ஆகவும், சர்க்கரை நோய் 26.7%-ஆகவும், உடல் பருமன் 38.8%-ஆகவும் உள்ள நிலையில், பெண்களுக்கு உயர் ரத்த அழுத்தம் 24.2%-ஆகவும், சர்க்கரை நோய் 25.2%-ஆகவும், உடல் பருமன் 44.2%-ஆகவும் உள்ளது.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881







# வேலை வாய்ப்பு

## திண்டுக்கல் மாவட்ட சுகாதாரத்துறையில் 36 பணியிடங்கள்!

திண்டுக்கல் மாவட்ட சுகாதார சங்கத்தில் 36 காலிப் பணியிடங்கள் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்பட உள்ளன. ஆடியோலஜிஸ்ட், பேச்சு சிகிச்சையாளர், ரேடியோகிராபர், ஏ.என்.எம்., சித்த மருத்துவர், யுனானி மருத்துவர், டிஸ்பென்சர், ஆயுஷ் பணியாளர், மருத்துவமனை உதவியாளர் உள்ளிட்ட பல்வேறு பணிகள் இதில் அடங்கும்.

பணியிடம்: திண்டுக்கல்
விண்ணப்பிக்கும் முறை: ஆஃப்லைன்
தொடக்கம்: 10.08.2026
கடைசி நாள்: 21.08.2026 மாலை 5 மணி
பணி: ஒப்பந்த அடிப்படை
தேர்வு: தகுதி மற்றும் விதிமுறைகளின்படி

விருப்பமும் தகுதியும் உள்ளவர்கள் திண்டுக்கல் மாவட்ட நிர்வாகத்தின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் அறிவிப்பை பார்த்து விண்ணப்பிக்கலாம்.

அதிகாரப்பூர்வ இணையதளம்: dindigul.nic.in

ஈரோடு சுகாதாரத்துறையில் 19 வேலைவாய்ப்புகள்!

ஈரோடு மாவட்ட சுகாதார சங்கத்தில் 19 காலிப் பணியிடங்கள் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்பட உள்ளன. சிறப்பு ஆசிரியர், ஆலோசகர், யோகா மற்றும் இயற்கை மருத்துவ மருத்துவர், ஆயுர்வேத மருத்துவர், சித்தா மருத்துவர், பார்மசிஸ்ட், சிகிச்சை உதவியாளர், ஆய்வக நுட்புநர் உள்ளிட்ட பணியிடங்கள் இதில் அடங்கும்.

பணியிடம்: ஈரோடு
பணியிடங்கள்: 19
பணி: ஒப்பந்த அடிப்படை
விண்ணப்ப முறை: ஆஃப்லைன்
விண்ணப்ப தொடக்கம்: 07.08.2026
கடைசி நாள்: 21.08.2026

தகுதியும் விருப்பமும் உள்ளவர்கள் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கலாம். முழுமையான விவரங்களுக்கு ஈரோடு மாவட்ட நிர்வாகத்தின் அதிகாரப்பூர்வ இணையதளத்தை பார்க்கவும்.

அதிகாரப்பூர்வ இணையதளம்: erode.nic.in

## சைனிக் பள்ளியில் 8 மத்திய அரசு வேலைகள்!

அமராவதிநகர் சைனிக் பள்ளியில் 8 காலிப் பணியிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. முதுநிலை ஆசிரியர் (கணிதம், ஆங்கிலம், இயற்பியல்), பட்டதாரி ஆசிரியர் (கணிதம்), ஆய்வக உதவியாளர், ஆலோசகர், பேண்ட் மாஸ்டர், கலை ஆசிரியர் உள்ளிட்ட பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன.

பணியிடம்: அமராவதிநகர்
காலியிடங்கள்: 8
பணி: நிரந்தரம் / ஒப்பந்த அடிப்படை
விண்ணப்ப முறை: ஆன்லைன்
தொடக்கம்: 01.08.2026
கடைசி நாள்: 25.08.2026

தகுதியும் விருப்பமும் உள்ளவர்கள் சைனிக் பள்ளியின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்.

அதிகாரப்பூர்வ இணையதளம்: sainikschoolamaravathi-nagar.edu.in

தூத்துக்குடி சுகாதாரத்துறையில் 11 வேலைவாய்ப்புகள்!

தூத்துக்குடி மாவட்ட சுகாதார சங்கத்தில் 11 காலிப் பணியிடங்கள் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்பட உள்ளன. தொழில்சார் சிகிச்சையாளர், ஆடியோமெட்ரிக் உதவியாளர், மருத்துவ அலுவலர், எம்.எல்.எச்.பி., பல் உதவியாளர், ஆலோசகர், நுண்ணுயிரியலாளர், தரவு உள்ளீட்டாளர், ஓட்டுநர் உள்ளிட்ட பணியிடங்கள் இதில் அடங்கும்.

பணியிடம்: தூத்துக்குடி
பணியிடங்கள்: 11
பணி: ஒப்பந்த அடிப்படை
விண்ணப்ப முறை: ஆஃப்லைன்
விண்ணப்ப தொடக்கம்: 14.08.2026
கடைசி நாள்: 28.08.2026

தகுதியும் விருப்பமும் உள்ளவர்கள் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கலாம். முழுமையான விவரங்களுக்கு தூத்துக்குடி மாவட்ட நிர்வாகத்தின் அதிகாரப்பூர்வ இணையதளத்தை பார்க்கவும்.

அதிகாரப்பூர்வ இணையதளம்: thoothukudi.nic.in

## BHEL நிறுவனத்தில் 10 மத்திய அரசு வேலைகள்!

பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ் லிமிடெட் (BHEL) நிறுவனத்தில் FTA Supervisor (Gr III) Safety பணிக்கு 10 காலியிடங்கள் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்பட உள்ளன.

பணியிடம்: இந்தியா முழுவதும்
காலியிடங்கள்: 10
பணி: ஒப்பந்த அடிப்படை
விண்ணப்ப முறை: ஆன்லைன்
விண்ணப்ப தொடக்கம்: 18.08.2026
கடைசி நாள்: 07.09.2026
அறிவிப்பு எண்: FTA 02/2026

தகுதியும் விருப்பமும் உள்ளவர்கள் BHEL நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ வேலைவாய்ப்பு இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்.

அதிகாரப்பூர்வ இணையதளம்: bplcareers.bhel.com

## சென்னை ICF-ல் 1,010 அப்ரண்டிஸ் பணியிடங்கள்!

சென்னை இன்டிக்ரல் கோச் ஃபேக்டரியில் (ICF) 2026-ம் ஆண்டுக்கான 1,010 Act Apprentice பணியிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. 10ஆம் வகுப்பு, 12ஆம் வகுப்பு மற்றும் ஐ.டி.ஐ. கல்வித் தகுதி உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

பயிற்சி காலம்: 1 ஆண்டு
பணியிடம்: சென்னை
பணியிடங்கள்: 1,010
விண்ணப்ப முறை: ஆன்லைன்
தொடக்கம்: 08.08.2026 காலை 9.30 மணி
கடைசி நாள்: 07.09.2026 மாலை 5.30 மணி
அறிவிப்பு எண்: PB/RR/39/App/2026

தகுதியானவர்கள் ICF-ன் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்.

அதிகாரப்பூர்வ இணையதளம்: pb.icf.gov.in/act2026/

## இன்றைய கார்ட்டூன்





# 1 லட்சம் டன் பெட்ரோலை ரஷியாவுக்கு ஏற்றுமதி செய்த இந்தியா!

புதுடெல்லி, ஆக. 19–

9 லட்சம் பீப்பாய்களில் 1 லட்சம் டன் பெட்ரோலை ரஷியா வுக்கு இந்தியா ஏற்றுமதி செய்தது. உலக பொருளாதார தடைக்கு மத்தியில் இது ரஷிய எல்லையை சென்றடைந்தது.

உக்ரைன், ரஷியா இடையே 4 ஆண்டுகளுக்கு மேலாக போர் தாக்குதல் நீடித்து வருகிறது. உக்ரைன் நடத்திய தொடர் டிரோன் தாக்குதல்கள் காரணமாக, ரஷியாவின் உள்நாட்டு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக அந்த நாட்டின் அரசு சுத்திகரிப்பு நிலையங்கள் தாக்கப்பட்டதால், நாட்டில் எரிபொருள் பற்றாக் குறை ஏற்பட்டுள்ளது. இது மீண்டும் பழைய நிலைக்கு வர 6 மாதங்கள் வரை ஆகலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது.




இதனால் வரலாற்றில் முதல்முறையாக ரஷியா, இந்தியாவிலிருந்து கடல் வழியாக பெட்ரோலை இறக்குமதி செய்யத் தொடங்கியுள்ளது. பொதுவாக ரஷியாவிடம் இருந்து இந்தியா கச்சா எண்ணெயை வாங்கும் நிலையில், தற்போது ரஷியா தனது நாட்டின் தேவையை பூர்த்தி செய்ய இந்தியா விலிருந்து சுத்திகரிக்கப்பட்ட எரிபொருளை வாங்கும் ஒரு அரிய தலைகீழ் மாற்றம் நிகழ்ந்துள்ளது.

உலகளவில் ரஷியாவுடன் வர்த்தகம் செய்யும் நாடுகள் மீது அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளான இங்கிலாந்து. பிரான்ஸ் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் பொருளாதார தடைகளை விதித்து வருகின்றன. இத்தகைய சூழலுக்கு மத்தியில் இந்தியா ரஷியாவுக்கு ரகசியமாக பெட்ரோலை ஏற்றுமதி செய்தது.

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் நயாரா எனர்ஜி நிறுவனத்தின் வாடினார் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து எகிப்து வழியாக ஒரு கப்பலில் இருந்து மற்றொரு கப்பலுக்கு எரிபொருளை மாற்றி, ரகசியக் கப்பல்கள் மூலம் கொண்டு செல்லப்பட்டது. கப்பல் போக்குவரத்துத் தரவுகளின்படி, முதற்கட்டமாக 42 ஆயிரம் டன் பெட்ரோல் அடங்கிய முதல் கப்பல் ரஷியாவைச் சென்றடைந்தது.

அதைத் தொடர்ந்து மற்றொரு கப்பல் மூலம் 68 ஆயிரம் டன் பெட்ரோல் ரஷியாவின் ஆர்க் டிக் துறைமுகத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. மொத்தம் 9 லட்சம் பீப்பாய்கள் மூலமாக மொத்தம் 1 லட்சத்து 10 ஆயிரம் டன் பெட்ரோல் இந்தியாவில் இருந்து ரஷியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. ஏற்கனவே ரஷியாவுடன் 80 ஆண்டுகால வெளியுறவு கொண்டாட்டத்தில் திளைக்கும் இந்தியாவின் நட்புறவுக்கு மற்றுமொரு எடுத்துக்காட்டாக இந்த நடவடிக்கை அமைந்துள்ளது.

# பாகிஸ்தானில் இருந்து 10,000 பயங்கரவாதிகள் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டு உள்ளனர்: நசீர் மத்னி!

பாகிஸ்தான், ஆக. 19–

பாகிஸ்தானில் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடைய ஒரு கூட்டத்தின் மேடை பிரசாரத்தின்போது மதகுரு நசீர் மத்னி கூறுகையில்,



பாகிஸ்தானில் இருந்து காஷ்மீருக்கு 10,000 பயங்கர வாதிகளை லஷ்கர்–இ–தொய்பா (LeT) அமைப்பின் தலைவர் ஹபீஸ் சயீத் அனுப்பியுள்ளதாக தெரிவித்தார். மதகுரு மத்னியின் கருத்துக்கள், ஜம்மு காஷ்மீரில் பயங்கரவாத தாக்குதலில் ஈடுபட்ட லஷ்கர்–இ–தொய்பாவின் பங்கு குறித்தும், அதன் தலைவர் குறித்தும் மீண்டும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியாவின் பயங்கரவாத வழக்குகளில் தொடர்புடைய ஹபீஸ் சயீத், பாகிஸ்தானை தளமாகக் கொண்ட லஷ்கர்–இ–தொய்பா பயங்கரவாத அமைப்பின் தலைவர் ஆவார். இந்த அமைப்பு இந்தியாவிற்கு எதிராக கடந்த ஆண்டுகளில் மிகவும் கொடூரமான தாக்குதல்களை நடத்தியுள்ளது.

லஷ்கர்–இ–தொய்பா அமைப்பிற்கு அல்–கொய்தா மற்றும் தலிபான்களுடன் தொடர்பு இருந்ததன் காரணமாக, ஐக்கிய நாடுகள் சபை 2005–ல் அந்த அமைப்பிற்கு தடை விதித்தது. பின்னர், 2008–ல் அமெரிக்கா ஹபீஸ் சயீதை உலகளாவிய பயங்கரவாதிகள் பட்டியலில் சேர்த்தது.

கடந்த 2008–ம் ஆண்டு நவம்பர் மாதம் 26–ந்தேதி மும்பையில் நடத்தப்பட்ட தாக்குதல்கள் உட்பட, இந்தியாவின் முக்கிய பயங்கரவாத தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளிலும் ஹபீஸ் சயீத்–இன் பெயர் இடம்பெற்றுள்ளது.

முன்னதாக ஜூலை மாதம், பஹல்காம் பயங்கரவாத தாக்குதல் வழக்கு தொடர்பாக சயீதுக்கு எதிராக ஜம்மு நீதிமன்றம் ஜாமீனில் வெளிவர முடியாத பிடியாணை பிறப்பித்தது.

இந்த வழக்கில் தலைமறைவாக உள்ள ஆறு பாகிஸ்தானிய குற்றவாளிகளுக்கு எதிராக மும்பை காவல்துறை சட்டமுறைப்படி விசாரணையை தொடங்கியது.

2008–ம் ஆண்டு நவம்பர் 26ஆம் தேதி இரவு, 10 பயங்கரவாதிகள் கடல் வழியாக மும்பைக்குள் நுழைந்து தாஜ் ஓட்டல், ரெயில் நிலையம் உள்ளிட்ட பகுதிகளில் தாக்குதல்களை நடத்தினர். அடுத்த நான்கு நாட்களில், அவர்கள் நகரம் முழுவதும் நடத்திய தாக்குதல்களில், 166 பொதுமக்கள் கொல்லப்பட்டு, சுமார் 300க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

மும்பையின் மிகவும் பரபரப்பான மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் நடந்த இந்த தாக்குதல், இந்தியா முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

இதையடுத்து 2025 ஏப்ரல் மாதத்தில் பஹல்காம் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலில் சுற்றுலா பயணிகள் உட்பட 26 பேர் கொல்லப்பட்டனர். இந்த வழக்கிலும் பாகிஸ்தான் பயங்கரவாதி ஹபீஸ் சையதின் பெயர் அடிபட்டு வருகிறது.

# இடதுசாரிகள் போராட்டத்தில் மாணவர்கள் பங்கேற்க தடை! தமிழக கல்வித்துறை!

சென்னை, ஆக. 19–

இடதுசாரி கட்சிகளின் போராட்டத்தில் மாணவர்கள் போராட்டத்துக்கு ஆதரவாக சென்னையிலும் மாணவர்கள் போராட்டம் நடத்தினர்.




பங்கேற்பதை தடுக்க நடவடிக்கை எடுக்க தமிழ்நாடு கல்லூரிக் கல்வித் துறை உத்தரவிட்டுள்ளது.

மாணவர்கள் சார்ந்த பிரச்னைகளில் மார்க்சிஸ்ட் கம்யூன்ஸ்ட் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகளுடன் இணைந்து அக்கட்சிகளின் எஸ்.எஃப்.ஐ. மற்றும் ஏ.ஐ. எஸ்.எஃப். ஆகிய மாணவர் அமைப்பு போராட்டத்தில் ஈடுபடுவது வழக்கம்.

சமீபத்தில் தில்லியில் மத்திய அரசுக்கு எதிராக நடைபெற்ற கரப்பான்பூச்சி ஜனதா கட்சி (சிஜேபி)

இந்த நிலையில், இடதுசாரிக் கட்சிகள் மற்றும் சிஜேபி போராட்டங்களில் கல்லூரி மாணவர்கள் பங்கேற்பதை தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு அரசு கல்லூரி முதல்வர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அதில் தெரிவித்திருப்பதாவது: ''இடதுசாரிக் கட்சிகள் மற்றும் தமிழ்நாடு காக்ரோச் ஜனதா கட்சி நடத்தும் போராட்டங்களில் மாணவ, மாணவிகள் மற்றும் இளைஞர்கள் பங்கேற்பதைத் தடுக்கும் வகையில் பள்ளிக் கல்வி, உயர் கல்வி, காவல் துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் ஆகிய துறைகளிடையே துறை இடைத்தொடர்பு மற்றும் ஒருங்கிணைந்த கூட்டு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மாணவ, மாணவிகள் மற்றும் இளைஞர்கள் இடதுசாரிக் கட்சிகள் மற்றும் தமிழ்நாடு காக்ரோச் ஜனதா கட்சி நடத்தும் போராட்டங்களில் பங்கேற்பதைத் தடுக்கும் வகையில் உரிய ஒருங்கிணைந்த கூட்டு நடவடிக்கை மேற்கொண்டு, மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் விவரத்தை உடன் இவ்வலுவலகத்திற்கு அனுப்புமாறும் கேட்டுக்கொள்கிறேன்'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.



மதுரை மாவட்டம், உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் மாநகராட்சி மண்டலம்–4, வாடு எண்–86, வில்லாபுரம் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள காய்ச்சல் வார்டு, மருந்தகம், ஆய்வகம், பதிவு செய்யும் இடம் உள்ளிட்ட பகுதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.நிஷாந்த் கிருஷ்ணா நேரில் பார்வையிட்டு அய்வு செய்து பொதுமக்களுக்கு வழங்கப்படும் மருத்துவ சேவைகள் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்யும்மாறு மருத்துவர்களிடம் அறிவுறுத்தினார்.

# தமிழ்நாடு சட்டப்பேரவையில் இருந்து அதிமுக வெளிநடப்பு!

சென்னை, ஆக. 19–

தமிழ்நாடு சட்டப்பேரவையில் இருந்து அதிமுக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

தமிழ்நாடு சட்டப்பேரவையில் நீர்வளம், ஊரக வளர்ச்சி மற்றும் சுற்றுலா ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் இன்று நடைபெறுகிறது.

இதனிடையே, வண்டல் மண் எடுக்கும் விவகாரம் குறித்து சட்டப்பேரவையில் விவாதிக்க அதிமுக கவன ஈர்ப்புத் தீர்மானம் தாக்கல் செய்திருந்தது. ஆனால், அந்த தீர்மானம் குறித்து ஆராய்ந்து பின்னர் முடிவெடுக்கப்படும் என்று தெரிவித்த பேரவைத் தலைவர் ஜே.சி.டி. பிரபாகர், உடனடியாக விவாதிக்க மறுத்துவிட்டார்.

இந்த நிலையில், தீர்மானம் வழங்கப்பட்டு 5 நாள்கள் ஆகியும் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை என்று சட்டப்பேரவையில் அமளியில் ஈடுபட்ட அதிமுக எம்.எல்.ஏ.க்கள், அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் வெளிநடப்பு செய்தனர்.



இதுதொடர்பாக பேரவையில் பேசிய ஜே.சி.டி. பிரபாகர், "காலம் கருதி எந்த தீர்மானத்தை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் தான் முடிவு செய்வேன். அதிமுக கொண்டுவந்த தீர்மானம் அரசு தரப்புக்கு அனுப்பப்பட்டுள்ளது. அவர்களிடம் இருந்து பதில் வந்த பிறகு நாளை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும்" எனத் தெரிவித்தார்.

# கர்நாடகத்தில் மிகப்பெரிய போலி மருந்து விற்பனை கும்பல் கண்டுபிடிப்பு!

கர்நாடகா, ஆக.19–

சாதாரண மருந்துகளை வாங்கி, அதற்கு சர்வதேச மருந்து நிறுவனப் பெயர்களின் லேபிள்கள் ஒட்டப்பட்டு, கர்நாடகத்தில், போலி மருந்துகள் விநியோகம் செய்யப்பட்டு வந்த அதிர்ச்சித் தகவல் வெளியாகியிருக்கிறது.




ஹிமாச்சல், தெலங்கானா மற்றும் இதர மாநிலங்களில் தயாரிக்கப்படும் சாதாரண மருந்துகளை வாங்கி, அதற்கு, சர்வதேச மருந்து நிறுவனங்களின் லேபிள்கள் ஒட்டப்பட்டு, கர்நாடகத்தில் உள்ள மருத்துவமனைகள், மருந்து கடைகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருவதாக சுகாதாரத் துறை அமைச்சர் காதர் குற்றம்சாட்டியிருக்கிறார்.

இது குறித்து சிறப்பு விசாரணைக் குழு அமைத்து விசாரணை நடத்த பரிசீலித்து வருவதாகவும், இது சர்வதேச மற்றும் மாநில அளவில் நடைபெறும் மிகப்பெரிய மோசடி என்றும் குறிப்பிடுகிறார்.

ஒரு நாளைக்கு ரூ.5 கோடி மதிப்பிலான போலி மருந்துகள் விநியோகிக்கப்படுகிறது. ஏற்கனவே எத்தனை கோடி மதிப்பிலான போலி மருந்துகளை மக்களைச் சென்றடைந்துள்ளது என்பதுதான் அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது என்று கூறும் அமைச்சர், இந்த போலி மருந்து கும்பல் முழுவதையும் கண்டுபிடித்து அழித்தொழிக்க வேண்டும் என்றும் இதற்கு இடையே செயல்படுபவர்களையும் கண்டுபிடிக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார்.

பிடாடியில் உள்ள பண்ணை வீடு ஒன்றில், ரூ.4.91 கோடி மதிப்பிலான மருந்துகள் சர்வதேச மருந்துகளின் லேபிள்கள் ஒட்டப்பட்டு தயாராகி வந்ததை, உணவு மற்றும் மருந்து தரக் கட்டுப்பாட்டு ஆணையத்தின் மருந்து அமலாக்கப் பிரிவு அதிகாரிகள் கண்டறிந்துள்ளனர்.

இதர மாநிலங்களிலிருந்து மலிவான மருந்துகளை வாங்கி வரும் இந்த கும்பல், அதற்கு சர்வதேச, இறக்குமதி செய்யப்படும் விலை அதிகம் கொண்ட மருந்துகளின் லேபிள்களை ஒட்டி விநியோகித்து வந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.




Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020